<u>**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம் மேட்டூர்**</u>

**C.C.No. 68/2020 நாள் 22.09.2022**

**அ.சா. 1 பரசுராம மூர்த்தி, வனச்சரக அலுவலர்**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>**முதல் விசாரணை**</u>

1) நான் தற்போது சேர்வராயன் வனச்சரகம் பாப்பிரெட்டிப்பட்டியில் வனச்சரகராக பணிபுரிந்து வருகிறேன். இந்த சம்பவம் நடைபெற்றபோது நான் மேட்டூர் வனச்சரகத்தில் கூடுதல் பொறுப்பாக பணியில் இருந்தேன். கடந்த 14.12.2019 ந்தேதி காலை 7.30 மணியளவில் நான் டேனிஷ்பேட்டை வனச்சரகத்தில் வனச்சரக அலுவலராக பணியில் இருந்தபோதுஉள்ளூர் தண்டா தெற்கு பிரிவு வனவர் திரு.சுந்தர்ராஜன் என்பவர் தொலைபேசி வாயிலாக சேலம் மாவட்டம் மேட்டூர் வனச்சரகம், உள்ளூர் தண்டா தெற்கு பிரிவு குரும்பனூர் வடக்கு பீட் எல்லைக்குட்பட்ட மேட்டூர் வட்டம் கொளத்தர் ஒன்றியம் இலக்கம்பட்டி ஊராட்சி, சின்னதண்டா அஞ்சல் பெரிய தண்டா சங்கரன் காட்டு ஓடை அருகில் தங்கவேல், த/பெ. பெரியசாமி கவுண்டர், கீமியான் காடு என்பவருக்கு சொந்தமான பட்டா நிலம் மற்றும் ஆக்கிரமிப்பு செய்திருந்த அரசு புறம்போக்கில் பயிரடப்பட்டிருந்த மக்காசோள காட்டில் ஆண் காட்டு யானை ஒன்று மர்மமான முறையில் இறந்து கிடப்பதாக எனக்கு தகவல் சொன்னார்.

2) தகவலை பெற்ற நான் மேற்கண்ட சம்பவயிடத்திற்க காலை 9 மணியளவில் சென்றடைந்தேன். நான் சென்று பார்த்தபோது ஆண்யானை படுத்த நிலையில் இறந்துகிடந்தது. அதனுடைய நாக்கு வெளிப்புறமாக தள்ளியிருந்தது. அதனுடைய ஆண் உறுப்பு வெளியில் வந்த நிலையில் இருந்தது. யானையின் தந்தப்பகுதியில் மின்சாரம் பாய்ச்சி ஏற்பட்டதற்கு உண்டான காயங்கள் காணப்பட்டன. அருகில் சென்று பார்த்தபோது மின்வேலி அமைத்ததற்குண்டான குச்சி மற்றும் இரும்பு கம்பிகள் காணப்பட்டன.

3) அவற்றை பார்க்கும்போது யானை மின்சாரம் பாய்ந்து உயிரிழந்தது தெரியவந்தது. சம்பவயிடத்தை பார்வையிடுகையில் எதிரி எவ்வித அரசு அனுமதியுமின்றி சட்டத்திற்கு புறம்பாக மின்வேலி அமைத்து மின்சாரம் பாய்ச்சி ஆண் காட்டு யானை கொன்றுள்ளார் என தெரியவந்தது.

4) பின்பு நான் மாவட்ட வன அலுவலர் திரு.அ.பெரியசாமி, சேலம் வனக்கோட்டம், மின்சார வாரிய உதவி கோட்டப் பொறியாளர், மற்றும் பொறியாளர், மேட்டூர் வட்ட நில அளவையாளர், இலக்கம்பட்டி கிராம நிர்வாக அலுவலர், வன கால்நடை மருத்துவர் திரு.பிரகாஷ், சின்னதண்டா அரசு கால்நடை மருத்துவர், மற்றும் மேட்டுக்கொட்டாய் வனக்குழு தலைவர் ஆகியோர்களுக்கு தகவல் சொல்லி சம்பவயிடத்திற்கு வரவழைத்தேன்.

5) இறந்த காட்டு யானையை மாவட்ட வன அலுவலர் முன்னிலையில் கால்நடை உதவி மருத்துவரால் சம்பவயிடத்திலேயே உடல் கூராய்வு செய்யப்பட்டது. பிறகு அந்த இடத்திலேயே உடல் கூராய்வு செய்த யானையை விஷம் ஊற்றி புதைக்கப்பட்டது. பின்பு அந்த இடத்திலேயே சேலம் வனவர் திரு.சுந்தரராசு மகசர் தயார் செய்தார். சம்பவயிடத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட குச்சி மற்றம் இரும்பு சுருள் கம்பி, யானையின் தந்தம் ஆகியவற்றை வனக்காப்பாளர் திரு.பத்ரன் அவர்கள் H நமூனா தயார் செய்து கைப்பற்றினார்.

6) நில உரிமையாளர் எதிரி தங்கவேலுவை அவர் வீட்டில் சென்று பார்த்தபோது அவர் தலைமறைவாகிவிட்டதால் அன்றைய தினம் கைது செய்யமுடியவில்லை.

**நேரமின்மை காரணமாக விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒம்/−எ.கே.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**